**<u>In the Court of the District Munsif, Eraniel</u>**

**Original Suit No. 107/2014 C/W 18/2015 Date:04.08.2026.**

**(PW3)- ஜெயராம்**

**<u>பிரதிவாதி தரப்பு குறுக்கு விசாரணை</u>**

1. அ.வ.எண்.92/1960 ஒரு பாகபரிவினை வழக்கு என்றால் சரிதான். அதன் நிறைவேற்று மனு எண். 11/1981 ஆக பத்மநாபபுரம் சார்பு நீதிமன்றத்தில் நடந்தது என்றால் சரிதான். அதில் எனது தாத்தா ராமாசாமிநாடார் மனுதாரர் என்றால் சரிதான். அந்த நிறைவேற்று மனுவில் ஏ, பி பட்டிகை சொத்துக்கள் அவருக்கு ஒதுக்கப்பட்டது என்றால் தற்போது நினைவில்லை. அ.வ.எண். 92/1960 வழக்கில் பிரதிவாதியான ராஜேஸ்வரன் பங்கை எனது தாத்தா ராமசாமிநாடார் பத்மநாபபுரம் சார்பு நீதிமன்றத்தில் ஏலம் எடுத்ததாக குறிப்பிட்டுள்ளேன் என்றால் சரிதான்.

2. நான் எனது முதல் விசாரணையில் ராஜேஸ்வரனின் பங்கு சொத்தின் அளவை குறிப்பிடவில்லை என்றால், அது சம்பந்தமாக வழக்கு நிலுவையில் உள்ளது, அது முடியும் சமயம் தான் அவருக்கு எவ்வளவு சொத்து என்று தெரியவரும். மேற்படி வழக்கு நிலுவையில் உள்ளது என்பதை காட்ட எந்த ஆவணமும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான், வேண்டுமென்றால் தாக்கல் செய்யலாம். நான் எனது முதல் விசாரணையில் குறிப்பிட்டுள்ள இடைகால மனு எண் தெரியுமா என்றால் தெரியாது.

3. ஏலம் எடுத்த பிறகு இடைகால மனு தாக்கல் செய்ய முடியாது என்றால் திருவனந்தபுரம் நீதிமன்றத்தில் பாகபிரிவினை வழக்கு நிலுவையில் இருப்பதால் எனது தாத்தா ஏலம் எடுத்த சொத்தை பொறுத்து இடைகால மனு தாக்கல் செய்தார். தற்போது எனது தாத்த உயிருடன் இல்லை என்றால் சரிதான். எனவே மனுதாரர் இறந்ததால் மேற்படி மனு தள்ளுபடி செய்யப்பட்டிருக்கும் என்றால் வாரிசு சேர்த்திருந்தார்கள். எனது தாத்தாவிற்கு பட்டிகை புல எண்ணில் பாகபடி ஒதுக்கப்பட்ட சொத்தின் விஸ்தீரணம் மற்றம் எனது தாத்தா விலைவாங்கிய சொத்து விஸ்தீரணம் எவ்வளவு என்றால் பாகப்படி 1.5 செண்டும், எனது தாத்தா கியரம் பெறவில்லை.

4. எனது தாத்தா ஏலம் பெற்ற சொத்தின் விஸ்தீரணம் எவ்வளவு என்றால் நீதிமன்றத்தால் அளவு குறிப்பிடப்படவில்லை. ஒரு பாக வழக்கில் நீதிமன்றத்தால்

ஒவ்வொரு நபருக்கும் எவ்வளவு பங்கு என்று பிரித்து முதல் நிலை மற்றும் இறுதி நிலை தீர்பாணை வழகங்கபட்டிருக்கும் என்றாலும் நான் தற்போது விஸ்தீரணம் குறிப்பிடவில்லை என்று வழக்கிற்காக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. என்னிடம் காட்டப்படும் வா.சா.ஆ. 8 ஆவணத்தில் 8 வது பக்கத்தில் எனது தாத்தாவிற்கு சி அக்க பிளானில் சர்வே எண் 5350 ல் 4 செண்ட் சொத்து ஒதுக்கப்பட்டுள்ளதாக குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் (சாட்சி ஆவணத்தை பார்த்து சாட்சி அளிக்கிறார்) சரிதான்.

5. அது நான் தாக்கல் செய்திருக்கும் வா.சா.ஆ 6, வா.சா.ஆ.8 ல் உள்ள ஆவணப்பட்டிகைக்கும் முறணாக உள்ளது என்றால் சரியல்ல. மேற்படி எனது தாத்தா ராமசாமிக்கு மோகன்தாஸ், துவாரக தாஸ், எனது தந்தை ராஜராம் ஆகிய ம 3 மகன்கள் என்றால் சரிதான். வா.சா.ஆ.9 பாகப்பத்திரதில் அவ.எ.ண் 107/2014 வழக்கின் வழக்கு பட்டிகை சொத்தானது மோகன் தாஸ்-க்கு ஒதுக்கப்பட்டதாக குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். வா.சா.ஆ.9 பாகப்பத்திரத்தில் பட்டிகை சொத்தின் புல எண் 152/14 என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான்.

6. அதில் மொத்தம் 3.5 ஏர் சொத்து உள்ளதாக குறிப்பிடப்பட்டுள்ளத என்றால் நினைவில்லை. அவ.எ.ண் 107/2014 வழக்கின் பட்டிகை சொத்து 3.5 ஏர் சொத்தில் எந்த இடத்தில் உள்ளது என்று என்னால் குறிப்பிட்டு கூறமுடியாது என்றால் 3.5 ஏர் ல் தென்மேற்கு மூலையில் மேற்கு பக்கம் 1 மீ இடம் விட்டு அமைந்துள்ளது, அதற்கான வரைபடம் நீதிமன்றத்தில் இருந்து பெற்று தாக்கல் செய்துள்ளேன். நான் குறிப்பிடுவதற்கும் பட்டிகை சொத்து கிடப்பிற்கும் எந்த சம்பந்தமும் இல்லை என்றால் சரியல்ல. வா.சா.ஆ. 9 பாகப்பத்திரப்படி அவ.எ.ண் 107/2014 பட்டிகை சொத்து மேற்படி மோகன்தாஸ்-க்கு ஒதுக்கப்பட்ட பின்பு அவர் திருமணம் ஆகாமல் இறந்துவிட்டார் என்றால் சரிதான், அதன் பின்பு அவரது ஒரே வாரிசான எனது தந்தைக்கு சொத்து கிடைத்தது.

7. மோகன்தாஸ்-க்கு, துவாரக தாஸ்- க்கு மற்றும் எனது அப்பாவான ராஜாராம் ஆகிய இரண்டு சகோதரர்கள் இருக்கின்ற நிலையில் எனது அப்பா ராஜாராம் மட்டும் ஒரே வாரிசான வரமுடியாது என்றால் துவாரக தாஸ் மோகன்தாஸ் இறப்பிற்கு முன்பே இறந்துவிட்டார். துவாரக தாஸ் -க்கு வாரிசுகள் உண்டு என்றால் சரிதான், ஆனால் இந்து வாரிசு உரிமை சட்டப்படி எனது தந்தை மட்டுமே வாரிசு ஆவார். எனது தந்தை வாரிசாக முடியாது என்றாலும் துவாரக தாஸ் இறக்கும் சமயத்தில் அவரது வாரிசுகள்

இருந்ததால் அவர்களுக்கும் மோகன்தாஸ்-க்கும் சொத்தில் உரிமை உண்டு என்றால் சரியல்ல. அதை மறைத்து எனது தந்தை ராஜாராம், எனது சகோதரர் ஹரிராமுக்கு எழுதி வைத்த வா.சா.ஆ. 1 ஆவணம் செல்லாது என்றால் சரியல்ல. எனவே அதில் உரிமை குறித்து பிரச்சனை ஏற்பட்டதால் வழக்கு பட்டிகை சொத்து எனது சகோதரர் கைவசத்தில் இல்லை என்றால் சரியல்ல, அவரது கைவசத்தில் தான் உள்ளது, வாடகைக்கு விட்டு இருக்கிறார்.

8. அதே போல் பொன்னையா நாடாரின் வாரிசு தங்கப்பன் என்பதை ஒப்புக்கொண்டும் அவ.எண். 92/1960 வழக்கில் பொன்னையா நாடாருக்கு சொத்தில் உரிமை மற்றும் கைவசம் அனுபவம் உள்ளது என்று ஒப்புக்கொண்டு தான் நாங்கள் 0.125 செண்ட் போலி ஆவணத்தின் மூலம் பெற்றுள்ளோம் என்றால் சரியல்ல. அ.வ.எண். 107/2014 வழக்கு பிரதிவாதியின் செலவு தொகையுடன் தள்ளுபடி செய்யப்படவேண்டியது என்றால் சரியல்ல.

(ஒப்பம்)

**மாவட்ட உரிமையியல் நீதிபதி,**

**இரணியல்.**